தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 18.07.2013

### வறட்சியால் குறுகிய கால சாகுபடிக்கு மாறும் கரூர் விவசாயிகள்



பருவமழை பொய்ப்பு, கடும் வறட்சி காரணமாக நெல், கரும்பு, வாழை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், குறுகிய கால சாகுபடியாக சூரியகாந்தியை பயிரிட்டு சாகுபடி செய்யும் பணியில் இறங்கியுள்ளனர் கரூர் மாவட்ட விவசாயிகள்.

கரூர் மாவட்டத்தில் விவசாயிகள் அதிக சாகுபடி செய்வது வாழை, கரும்புதான். அதே நேரத்தில் நெல் சாகுபடியும் உண்டு. காவிரி மற்றும் அமராவதி ஆற்றுப் பாசனம் மூலமாகவும், சில பகுதிகளில் ஆழ்துளை மூலமாகவும் விவசாயிகள் சாகுபடியை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் நிகழாண்டில் பருவமழை பொய்ப்பு, வறட்சி காரணமாக நெல், கரும்பு சாகுபடி கரூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டது. வாழையைப் பயிரிட்டிருந்த

விவசாயிகளும் வறட்சியினாலும், சூறைக் காற்றினாலும் கடுமையான பாதிப்புக்குள்ளாகினர்.

இந்நிலையில் குறுகிய காலப் பயிராகவும், அதிகம் தண்ணீர் தேவைப்படாத ஒன்றாகவும் உள்ள சூரியகாந்தியை சாகுபடி செய்ய விவசாயிகள் தயாராகிவிட்டனர். மாவட்டத்தில் தற்போது புலியூர், உப்பிடமங்கலம், மஞ்சநாயக்கன்பட்டி, போத்துராவுத்தன்பட்டி, பஞ்சப்பட்டி, தோகமலை, லாலாபேட்டை, குளித்தலை, கிருஷ்ணராயபுரம், கடவூர் பகுதிகளில் விவசாயிகள் சூரியகாந்தி பயிரிட்டுள்ளனர். தற்போது கரூர் மாவட்டத்தில் 2000 ஏக்கர் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிடப்பட்டுள்ளது. 90 முதல் 100 நாள்களில் சாகுபடி செய்ய இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதிக தண்ணீர் தேவை இல்லை: சூரியகாந்தி சாகுபடி செய்ய அதிக தண்ணீரும் தேவைப்படுவதில்லை 5 நாள்களுக்கு ஒருமுறை சூரியகாந்தி பயிருக்கு தண்ணீர்விட்டால் போதும். 10 நாள்கள்வரை தண்ணீர் இல்லாமல் தாங்கிக் கொள்ளக்கூடிய தன்மை கொண்டது சூரியகாந்தி. ஒரு ஏக்கரில் 400 கிலோவரை சூரியகாந்தி உற்பத்தி செய்ய முடியும் என்கின்றனர் விவசாயிகள்.

தற்போது காவிரி மற்றும் அமராவதியில் திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீர் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. இதனால் ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் தொடர்ந்து கிடைத்து வருவதால் பயிரிட்டுள்ள சூரியகாந்திக்கு பிரச்னை இல்லை. ஒரு ஏக்கர் சூரியகாந்தி சாகுபடி செய்ய ரூ.10,000 வரை செலவாகிறது, அதே நேரத்தில் வெள்ளக்கோவில் சந்தைக்குச் சென்றுதான் விற்பனை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. எனவே விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் செய்வதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் எனவிவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளுக்குப் பயிற்சி: சூரியகாந்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு விற்பனை நுணுக்கங்கள், சூரியகாந்தியை தரம்பிரிப்பது விற்பனை குறித்த பயிற்சியை அளித்து வருகிறோம். பயிரிடப்பட்டுள்ள சூரியகாந்தி சில இடங்களில்

முளைக்க ஆரம்பித்துள்ளது. சில இடங்கள் பூ விட்டுள்ளன. இன்னும் ஒரு மாதத்துக்குப் பிறகு சாகுபடி செய்யும் பணி தொடங்கும் என எதிர்பார்க்கிறோம் என்கிறார் வேளாண் விற்பனை வணிகத் துறை துணை இயக்குநர் ரவி.

விவசாயிகள் அச்சப்படத் தேவையில்லை: விவசாயிகளிடம் நேரடியாகச் சென்று வியாபாரிகள் கொள்முதல் செய்யும் பணி இடைத்தரகர் மூலம் நடைபெறுவதால் விவசாயிகளுக்கு போதிய பலன் இல்லை என்ற கருத்து இருந்து வந்தது. நிகழாண்டில் கரூர் அருகிலுள்ள ராயனூர், குளித்தலை வட்டத்திலுள்ள இரும்பூதிப்பட்டி ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் ஒழுங்கமுறை விற்பனைக் கூடங்களில் சூரியகாந்தி விற்பனை செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு விவசாயிகள் தங்களது பொருள்களை நேரடியாக விற்பனை செய்யலாம். இடைத்தரகர் கிடையாது.

விவசாயிகள் தங்களது பொருள்களை லாபத்துடன் விற்பனை செய்து பயன் பெறலாம் என்றார் ராயனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் காந்தி.

**வெண்டையில் மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்த...**



வெண்டையில் மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து,தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் கு. இளஞ்செழியன் விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

வெண்டையில் மாவுப்பூச்சியானது தற்போது அதிகளவில் பொருளாதார சேதத்தை ஏற்படுத்துகின்றன. இவை அனைத்து வகையான பயிர்கள் மற்றும் களைச் செடிகளிலும் வாழும் தன்மை கொண்டவை.

பூச்சிகளின் மீது காணப்படும் வெண்மையான மெழுகு பூச்சு, குறுகிய காலத்தில் அதிக இனப் பெருக்கம் செய்யும் திறன், மாறிவரும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு அதிக நாள்கள் உயிர் வாழும் தன்மை, அளவுக்கு அதிகமாக பூச்சிக் கொல்லி மருந்து உபயோகித்தல், இரண்டிற்கு அதிகமான பூச்சிக் கொல்லி மருந்துகளின் கலவைகளைப் பயன்படுத்துதல், பூச்சிகளின் மறு உற்பத்தித்

திறனை அதிகப்படுத்தக்கூடிய செயற்கை பைரித்ராய்டு மருந்துகளை பயன்படுத்துதல் போன்றவையே இப் பூச்சி அதிகளவில் பரவுவதற்கான காரணங்களாகும்.

இப் பூச்சிகள் வெண்டை தவிர பருத்தி, செம்பருத்தி, சூரியகாந்தி, கத்தரி, தக்காளி, பார்த்தீனியம், துத்தி, சாரணை, குரோட்டனஸ் போன்ற செடிகளையும் தாக்குகிறது. இவை ஒரு செடியில் இருந்து மற்றொரு செடிக்கு காற்று, எறும்புகள், களைகள் மற்றும் மனிதர்கள் மூலம் பரவுகின்றன.

இப் பூச்சியானது தொடர்ச்சியான வறண்ட சூழ்நிலையில் அதிகளவு இனப்பெருக்கம் செய்து பரவும் தன்மை கொண்டது.

சேத அறிகுறிகள்:இளம் மற்றும் வளர்ச்சியடைந்த பூச்சிகள் இலையின் அடிப்பகுதி, தண்டு மற்றும் காயப் பகுதிகளில் இருந்து கொண்டு சாற்றினை உறிஞ்சுகின்றன. இதனால் இலைகள் சுருண்டும், மஞ்சள் நிறமாக மாறியும் பின்னர் உதிர்ந்து விடுகின்றன. இவை பஞ்சு போன்ற வெண்மையான திட்டு திட்டாக செடிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும்.

மாவுப் பூச்சியானது தேன் போன்ற கழிவுப் பொருளை வெளியேற்றுவதால் அவற்றை உண்பதற்கு எறும்புகள் அதிகளவில் வருகின்றன. இந்தக் கழிவுப் பொருள்கள் இலைகள் மற்றும் காய்களில் படிவதால் கரும்பூஞ்சாணம் படர்கிறது. இதனால் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்பட்டு மகசூல் பாதிக்கப்படுகிறது. மாவுப்பூச்சியின் தாக்குதல் அதிகமாகும் போது செடி முழுவதும் காய்ந்து பின்னர் இறந்து விடுகின்றன.

வாழ்க்கை பருவம்: இவை ஆண் பூச்சியுடன் சேராமலேயே முட்டையிடும் திறன் பெற்றது. வளர்ந்த பூச்சியின் உடலானது நீள்வட்டமாகவும், பக்கவாட்டில் வட்ட வடிவமாகவும் காணப்படும். இப் பூச்சி பொதுவாக கரும் பச்சை அல்லது கருப்பு நிறத்தில் இருக்கும். ஆனால், உடல் முழுவதும் பஞ்சு போன்ற வெண்மையான மெழுகுப் பூச்சினால் மூடப்பட்டிருக்கும். மேற்புற நடுவயிற்றுப் பகுதியில் கருமை நிற பகுதி தென்படும்.

மேலாண்மை முறைகள்: வரப்புகளில் உள்ள களைகளை அகற்றி சுத்தமாக வைக்க வேண்டும். தாக்குதல் தென்பட்ட உடனே தாக்கப்பட்ட செடிகள் மற்றும் களைச் செடிகளைப் பிடுங்கி அழிக்க வேண்டும். பூச்சி மற்றும் எறும்புகளின் நடமாட்டத்தைக் கண்டறிந்து உடனடியாக தேவையான மேலாண்மை முறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

ஒட்டுண்ணிகள் மற்றும் இரைவிழுங்கிகள் அதிகமாக இருக்கும்போது பூச்சிமருந்து தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும். சேதம் அதிகமாக இருக்கும்போது ஒரு ஏக்கருக்கு இமிடாகுளோபிரிட் 18.5 எஸ்சி 120 மி.லி. அல்லது தயமீதாக்கம் 30 டபிள்யூடிஜி 120 கிராம் அல்லது அசிபேட் 75 எஸ்பி 400 கிராம் அல்லது புரோபனோபாஸ் 50 இசி 400 மி.லி. அல்லது குளோர் பைரிபாஸ் 20 இசி 100 மி.லி. என்ற அளவில் ஒட்டும் திரவம் 200 மி.லி. கலந்து கைத் தெளிப்பான் கொண்டு செடி முழுவதும் நன்கு நனையும் படியும், பூச்சியின் மீது படும்படியும் தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் மீண்டும் ஒரு முறை 15 நாள்கள் கழித்து பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தெளிக்க வேண்டும்.

ஒரே மருந்தைத் திரும்ப திரும்ப தெளிக்காமல் மருந்துகளை சுழற்சி முறையில் தெளிக்க வேண்டும். பூச்சிமருந்தை காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கலாம் என்றார் அவர்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் இன்று மழையோ, இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தென்மேற்கு பருவமழை பெய்து வரும் நிலையில், நாட்டின் 88 சதவீத பகுதிகளில், நீண்ட நாள் சராசரியைக் காட்டிலும் கூடுதல் மழை பெய்துள்ளது. இந்த நிலையில் தமிழகத்தின் சில இடங்களில் மழை பெய்து வருகிறது.

புதன்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் வால்பாறை மற்றும் சின்னக்கல்லாற்றில் 40 மி.மீ. மழை பதிவானது. ஏற்காடு, நடுவட்டம் ஆகிய பகுதிகளில் 30 மி.மீ. மழையும், தேவாலா, வாழப்பாடி, பெரியாறு பகுதிகளில் 20 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

சங்கராபுரம், திண்டிவனம், விழுப்புரம், திருக்கோவிலூர், மயிலம், கூடலூர், உத்தமபாளயம், ஸ்ரீமுஷ்ணம், பென்னாகரம், சேலம், ஆத்தூர் ஆகிய பகுதிகளில் 10 மி.மீ. மழை பதிவானது.

**"விவசாயிகளுக்கு ரூ.605 கோடி பயிர்க்கடன்'**

விவசாயிகளுக்கு ரூ.605 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.

தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளுடன் புதன்கிழமை ஆலோசனை நடத்திய பிறகு அவர் கூறியது:

டெல்டா விவசாயிகளுக்கு பருவகாலத்தில் பயிர் செய்வதற்கு ஏற்ற வகையில் கடன் மற்றும் உரங்கள் தட்டுப்பாடின்றி வழங்கப்பட வேண்டும். நடப்பு நிதியாண்டில் பயிர்க் கடனுக்காக ரூ.4,500 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில், ஜூன் மாதம் வரையில் ரூ.605 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டுக்கு பயிர்க் கடன் மற்றும் இதர வகையான கடன்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை தொய்வின்றி வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

**கணினி மயமாகும் மனிதர்கள்...**

இன்றைய நவீன வாழ்வியல் தேவைகளில் தகவல் தொடர்பு மின்னணு சாதனங்கள் மனித வாழ்வில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. இவை இல்லாத மனித வாழ்வை யாரும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு அவை நம் வாழ்வோடு இரண்டறக் கலந்து விட்டன.

காடுகளிலும், மலைகளிலும் விலங்குகளோடு விலங்குகளாக அலைந்து திரிந்து கொண்டிருந்த மனிதன் சைகைகளின் மூலமும், ஓசைகளின் மூலமும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டான். இதுவே தகவல் தொழில்நுட்பத்தின் முதல் படி. அன்று தொடங்கிய இதன் வளர்ச்சி, இன்று பல்வேறு துறைகளிலும் தன் விழுதுகளைப் பாய்ச்சி, உலகின் எந்த மூலையில் எது நடந்தாலும், அதை அடுத்த நொடியே நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தி, உலகத்தையே நம் உள்ளங்கைக்குள் சுருக்கிவிட்டது.

அதிலும் இன்று செல்போனும், கணினியும் இல்லாத வீடே இல்லை. இவையிரண்டும் இல்லாவிட்டால் மனித குலத்தின் செயல்பாடுகளே முடங்கிவிடும் என்பதே இன்றைய வாழ்க்கை முறை.

கோடிக்கணக்கான ரூபாய்களை வரவு - செலவு செய்யும் வங்கிகள் துவங்கி, ஆயிரக்கணக்கான பயணிகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அழைத்துச்செல்லும் ரயில் போக்குவரத்து, வியாபாரம், கல்வி, மருத்துவம் என கணினி கால் பதிக்காத துறையே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

கல்வித்துறையில் கணினி பயிலும் மாணவர்கள் மட்டுமே கையாளும் கணினிகளை, இன்று அனைத்துப் பிரிவு பள்ளி, கல்லூரி மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் தமிழகத்தில் அரசே அதனை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறது.

இன்று நாட்டில் நடைபெறும் பெரும்பாலான கொலை, கொள்ளைச் சம்பவங்களில் போலீஸார் துப்புதுலக்கி குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு செல்போன் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் பெரிதும் பயன்படுகின்றன.

சுனாமி, புயல், வெள்ளம், கனமழை என அனைத்து வகையான இயற்கைச் சீற்றங்களையும் முன்கூட்டியே அறிந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து நம்மைத் தற்காத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது.

மருத்துவத் துறையிலும் முன்புபோல உடலைக் கிழித்து செய்யும் அறுவை சிகிச்சைகளுக்குப் பதிலாக உடலில் ஒரே ஒரு துளை போட்டு அத் துளையின் வழியே உடல் உள்ளுறுப்புகளைப் பார்த்து செய்யும் அறுவைச் சிகிச்சைகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. மூளையையும், உடல் உள் உறுப்புகளையும் பல கோணங்களில் படம்பிடித்துக் காட்டக் கூடிய நவீன அறிவியல், மனிதன் முழுமையாகக் கணினிமயமாகி விட்டதைத்தான் காட்டுகிறது.

இவ்வாறு மனித வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட கணினி யுகம் பல்வேறு குறைகளையும், தீமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எந்தவொரு கண்டுபிடிப்பையும் நன்மைக்காகப் பயன்படுத்துவதும், தீமைக்காகப் பயன்படுத்துவதும் நம் கையில்தானே இருக்கிறது?

அதில் மிக முக்கியமான பிரச்னை, பெருகிவரும் "சைபர் கிரைம்' என்றழைக்கப்படும் தகவல் தொழில்நுட்பக் குற்றங்கள் தொடர்பானதாகும். வாடிக்கையாளர்களுக்குத் தெரியாமலேயே அவர்களின் வங்கிக் கணக்கிலிருக்கும் பணத்தை இணையதளம் வழியாகத் திருடுவது, மற்ற நிறுவனங்கள் மற்றும் அரசின் தகவல்களைத் திருடுவது, ரயில்கள் மற்றும் கோயில் போன்ற இடங்களுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் ஏற்படுத்துவது, பெண்களுக்கு ஆபாசமான குறுஞ்செய்திகளை அனுப்புவது என பெருகிவரும் "சைபர்' குற்றங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

கணிசமான இளைஞர்கள் இணையத் தேடல்களில் சினிமா, கிரிக்கெட் செய்திகளுக்கு முக்கியத்துவம் தருகின்றனர். நண்பர்களுடன் வெட்டியாக அரட்டை அடிக்கவும் பயன்படுத்துகின்றனர். ஆக்கப்பூர்வமான அறிவுத் தேடல்கள் மேற்கொள்வோர் மிகமிகக் குறைவு.

பெருகிவரும் மக்கள்தொகை, வேலையில்லாத் திண்டாட்டத்தில் நமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, வாழ்வை முன்னேற்றிக் கொள்ள இளம் தலைமுறையினர் சிந்திக்க வேண்டுமே தவிர, தங்களின் ஆற்றலை இப்படி வீணான விஷயங்களில் விரயமாக்கக் கூடாது.

அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில் உள்ள இந்தியக் கணினியியல் வல்லுநர்களை நாம் மீண்டும் நம் நாட்டுக்கு அழைத்துக் கொண்டால், அந்த நாடுகளின் இயக்கமே கணிசமாக நின்றுபோகுமளவுக்கு இந்தியர்களின் மூளைகளே அந்த நாடுகளின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருக்கின்றன. சுமார் 35 சதவீதத்துக்கும் மேலான இந்தியர்கள் வெளிநாடுகளில் கணினித் துறையில் பணியாற்றி வருகின்றனர் என்றால், நமது திறமையின் அளவை நாமே எடை போட்டுக் கொள்ளலாம்.

பாலை உறிஞ்சி, நீரை ஒதுக்கும் அன்னப் பறவைபோல நன்மையைப் பயன்படுத்தி, தீயவற்றை நீக்கும் மனப்பக்குவம் நம் அனைவருக்கும் வந்தால்தான், முன்னேற்றம் என்பது சாத்தியப்படும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.07.2013**

## மண் பரிசோதனைக்கு தயங்கும் விவசாயிகள்

தேனி:கடமலைக்குண்டு விவசாயிகள் மண், நீர் பரிசோதனை செய்ய தயக்கம் காட்டி வருகின்றனர்.சில்லமரத்துப்பட்டி, சீப்பாலக்கோட்டை, கோம்பை, கடமலைக்குண்டில் கூட்டுறவுத்துறை சார்பில் அக்ரி கிளினிக்குகள் செயல்பட்டு வருகின்றன.கடமலைக்குண்டு தவிர மற்ற மூன்று இடங்களிலும் அக்ரி கிளினிக்குகளை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி வருகின்றனர். தினமும் பல விவசாயிகள் தங்கள் நிலத்து மண், நீர் எடுத்து வந்து பரிசோதனை செய்து அதற்கேற்ற பயிர் சாகுபடி, உர, மருந்து நிர்வாக ஆலோசனைகளை பெற்றுச் செல்கின்றனர். கடமலைக்குண்டில் பெரும்பாலும் விவசாயிகள் தங்கள் நிலங்களில் கொட்டைமுந்திரி, தென்னை சாகுபடி செய்துள்ளதால் மாற்றுப்பயிர் சாகுபடிக்கு தயாராக இல்லை. எனவே வேறு பயிர் செய்ய விருப்பம் இல்லாததால், விவசாயிகள் தங்கள் நிலத்து மண், நீரை பரிசோதனை செய்ய ஆர்வம் காட்டவில்லை.செயல்படாமல் உள்ள கடமலைக்குண்டு அக்ரி கிளினிக்கை தேவைப்படும் மற்ற இடத்திற்கு மாற்ற வேண்டும்.

## வீட்டுத்தோட்டம் விழிப்புணர்வு

தேனி:ரோவர் வோளாண் கல்லூரி சார்பில்,தேனி மாவட்டம், பெரியகுளம் லெட்சுமிபுரத்தில், கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் முகாம் நடந் தது. இதன் ஒரு பகுதியாக, வீட்டுத்தோட்டம் அமைப்பது பற்றிய களப்பயற்சி அளித்தனர். வீடு தோறும் சென்று, வீட்டு தோட்டம் அமைப்பது குறித்து

விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

விதைகள், நாற்றுகள் கொடுத்தனர். முகாமில், பவித்ரா தரணி, சித்ரா தேவி, ஆன் மரியா, மணி மொழி, கங்கா, கனகா, கீது, விக்னேஷ்வரி, ஜீவிதா, கவிபிரியா, பெனிக்கன், பூவராகவன், நன்னிலவாசன், கோவிந்தராஜ்,ஜெகதீஷ் பங்கேற்று விளக்கம் அளித்தனர்.

## கீழ்பவானியில் கான்கிரீட் தளம் தேவை5,000 விவசாயிகளின் பிரம்மாண்ட பேரணி

ஈரோடு: கீழ்பவானி வாய்க்காலில், 1,200 கோடி ரூபாயில் கான்கிரீட் தளம் அமைக்கும், தமிழக அரசின் திட்டத்துக்கு, ஆதரவு தெரிவித்து, 5,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்ற பிரமாண்ட பேரணி, ஈரோட்டில் நேற்று நடந்தது.ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணை மூலம், கீழ்பவானி, பழைய பாசனங்களான தடப்பள்ளி, அரக்கோட்டை, காலிங்கராயன், மேட்டூர் வலதுகரை பாசன பகுதிகள் உள்ளன.இதில் கீழ்பவானி வாய்க்கால், 200 கி.மீ., நீளத்தில், 2.07 லட்சம் ஏக்கர் பாசன பகுதியை கொண்டுள்ளது. ஈரோடு, திருப்பூர், கரூர் ஆகிய மூன்று மாவட்டங்கள் பயனடைகிறது.ஆண்டுதோறும் நஞ்செய் பாசனத்துக்கு, 24 டி.எம்.சி.,யும், புன்செய் பாசனத்துக்கு, 12 டி.எம்.சி., என மொத்தம், 36 டி.எம்.சி., தண்ணீர் வாய்க்காலில் திறக்கப்படுகிறது.இதில், நெல், கரும்பு, மஞ்சள், வாழை பயிரிடுகின்றனர். வாய்க்கால் அமைத்தது முதல் இன்று வரை தூர்வாராததால், தண்ணீர் வீணாகியது.கடைக்கோடி விவசாயிக்கு தண்ணீர் கிடைக்கும் பொருட்டு, இவ்வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்க முடிவு செய்து, 1,200 கோடி ரூபாய், உலக வங்கி நிதியில் திட்டம் தயாரிக்கப்பட்டது.தமிழக அரசின் திட்டத்துக்கு, கீழ்பவானி வாய்க்கால் விவசாயிகளில் ஒரு தரப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து, உண்ணாவிரதம், மனித சங்கிலி, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் முற்றுகை, ஆர்ப்பாட்டம் நடத்தினர்.திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த, 70 சதவீதம்

விவசாயிகள், இத்திட்டத்தை விரைந்து துவங்கக்கோரி, நேற்று பிரமாண்ட பேரணி நடத்தினர். ஈரோடு சம்பத் நகரில் துவங்கி, கொங்கு கலையரங்கம் வரை ஊர்வலமாக வந்தனர்.மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்து வந்த, 5,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.கீழ்பவானி முறை நீர்பாசன விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன், தமிழக விவசாயிகள் சங்கம் பெரியசாமி மற்றும் விவசாயிகள் சங்கத்தினர் பங்கேற்றனர்.வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைத்து, வீணாகும் தண்ணீரை சேமித்து, கடைக்கோடி விவசாயிக்கும் முழுமையான தண்ணீர் கிடைக்க செய்ய வேண்டும். வாய்க்காலை ஒட்டி, கிணறு வெட்டி, தண்ணீர் எடுத்து, விவசாயம் மேற்கொள்பவர்களே இத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.அரசின் திட்டத்தை முழுமையாக விரைந்து செயல்படுத்திட, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி, கலெக்டர் சண்முகத்திடம் விவசாயிகள் மனு வழங்கினர்.

## வாத்து முட்டைவிலை உயர்வு

பரமத்திவேலூர் பகுதியில் வாத்து முட்டையின் விலை அதிகரித்துள்ளது.வேலாயுதம்பாளையம், பரமத்திவேலூர் பகுதிகளில் வாத்து முட்டை, இறைச்சி அதிக அளவில் விற்பனையாகிறது. கொழுப்பு சத்து குறைவு என்பதாலும், சளி, இரைப்பு போன்ற உடல் உபாதைகளை குணப்படுத்தும் தன்மை கொண்டது என்பதாலும், வாத்து முட்டை, இறைச்சியை சாப்பிடுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.இந்நிலையில் வாத்து முட்டையின் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரம், 7 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு முட்டை, நேற்று, 9 ரூபாயாக அதிகரித்ததுள்ளது. அதேபோல, 8 ரூபாய் விற்பனையான அவித்த முட்டை,10 ரூபாய்க்கு விற்பனையானது. வெளிமாவட்டங்களில் இருந்து வாத்து முட்டை விற்பனைக்கு வரத்து குறைவால், விலை அதிகரித்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகள் குறைதீர்க்க நாளை கூட்டம்

புதுக்கோட்டை: நாளை நடக்கும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்க, மாவட்ட விவசாயிகளுக்கு கலெக்டர் மனோகரன் அழைப்பு விடுத்துள்ளார். புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நாளை காலை, 10 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில், அரசுத்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்று விவசாயம் தொடர்பான விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்க உள்ளனர். கோரிக்கைகளுக்கு தீர்வுகாண விரும்பும் விவசாயிகள் இதில் பங்கேற்கலாம்.

## "ஏரி கலங்கலை உயர்த்த வேண்டும்' காயரம்பேடு விவசாயிகள் எதிர்பார்ப்பு

கூடுவாஞ்சேரி:காயரம்பேடு ஏரியில், மழைக் காலங்களில் வீணாகும் நீரை சேமிக்கும் வகையில், கலங்கலை உயர்த்தி அமைக்க வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட காயரம்பேடு ஊராட்சியில், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் ஏரி உள்ளது. இதனை பயன்படுத்தி, சுற்றுப் பகுதிகளில் உள்ள, 150 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக, ஏரி அருகே உள்ள பட்டா நிலங்கள், வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுள்ளன. இவைகள், மழைக் காலங்களில், நீரில் மூழ்காமல் இருக்க, மண் கொட்டி உயர்த்தி அமைக்கப்பட்டுள்ளன.

இதனால், ஏரியின் வரத்து கால்வாய் வழியாக, மழைநீர் செல்ல முடியாமல், கலங்கல் வழியாக வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, வரத்து கால்வாய் மூலம் வரும் நீர், வீணாகாமல், ஏரிக்கு செல்லும் வகையில், கலங்களை உயர்த்தி அமைக்கவும், கலங்கலுக்கும் மனைப் பிரிவுக்கும் இடைப்பட்ட பகுதியை

ஆழப்படுத்தவும், பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### திருந்திய நெல் சாகுபடி தகவல்

காஞ்சிபுரம்:திருந்திய நெல் சாகுபடி முறையில், நெல்பயிரிட விவசாயிகள் முன் வரவேண்டும் என, வேளாண்மை இணை இயக்குனர் சவுந்திரராஜன் தெரிவித்தார்.
இதுகுறித்து, அவர் கூறியதாவது:
பருவ மழை துவங்கி இருப்பதால், நெல் பயிரிடும் விவசாயிகள் தங்கள் நிலங்களில், திருந்திய நெல் சாகுபடி முறையில், நெற்பயிரை செய்யலாம். இதற்காக, வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில், சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் வேளாண்மை அலுவலரிடம், உரிய தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் விதைகள், உரங்கள், நோய் தடுப்பு முறைகளை விவசாயிகள் பெற்று, அதிக மகசூலை பெறலாம்.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### களைகட்டும் சாலையோர பழ விற்பனை விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய்

பாலூர்:தோட்டங்களில் இருந்து அறுவடை செய்யப்படும் பழங்களை,
விவசாயிகள், நேரடியாக, சாலையோரங்
களில் வைத்து விற்பனை செய்வதால், கூடுதல்
வருவாய் கிடைப்பதாக தெரிவித்துள்ளனர்.

தோட்டத்து பழங்கள்

செங்கல்பட்டு - காஞ்சிபுரம் சாலையில், ஆத்தூர், திம்மாவரம், பாலூர், மேலச்சேரி உள்ளிட்ட கிராமங்களில், பழவகை மரங்களான, மா, கொய்யா, மாதுளை, வாழை உள்ளிட்டவை
பயிரிடப்பட்டுள்ளன.

இங்கு, அறுவடை செய்யப்படும் பழங்களை, அப்பகுதி விவசாயிகள், மொத்த

வியாபாரிகள் மற்றும்

சில்லரை விற்பனை செய்து வருகின்றனர்.

தற்போது, மாம்பழம், கொய்யா மற்றும் மாதுளை பழங்களின் அறுவடை காலம் என்பதால், அங்குள்ள விவசாயிகள், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் சாலையில், 20க்கும் மேற்பட்ட இடங்களில், மரத்தடியில் வைத்து, பழங்களை விற்பனை செய்து வருகின்றனர்.

தோட்டத்தில் இருந்து நேரடியாக கிடைக்கும் பழங்கள் என்பதால், இதனை, அவ்வழியே செல்வோர் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

ரூ.1,000க்கு விற்பனை

இது குறித்து, ஆத்தூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில்,

""தோட்டத்தில், தினசரி பழுக்கும் பழங்களை, அறுவடை செய்து, சாலையோரமாக வைத்து

விற்பனை செய்கிறோம். ஒரு கிலோ மாம்பழம், 55 ரூபாய் முதல் 120 ரூபாய் வரையும், ஒரு கிலோ கொய்யா, 40 ரூபாயும்,

ஒரு கிலோ மாதுளை, 95 ரூபாயும் விற்பனையாகிறது. தினசரி, 1,000 ரூபாய்க்கும், முகூர்த்த நாட்களில்,

கூடுதலாகவும் விற்பனையாகிறது,'' என்றார்.

## நாளை விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

திருவள்ளூர்:விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், நாளை (19ம் தேதி) நடைபெறுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தின் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், நாளை (19ம் தேதி) வெள்ளிக்கிழமை, ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்களில், காலை 11:00 மணிக்கு நடைபெறுகிறது.

அன்றைய தினம், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை துறை, தோட்டக்கலை,

வருவாய் துறை, மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மரம் வளர்ப்பு கருத்தரங்கம்

ஊத்துக்கோட்டை:இளைஞர்கள் மற்றும் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களுக்கு, "ஆத்மா' திட்டம் குறித்த கருத்தரங்கம், பூண்டி வனவியல் விரிவாக்க கோட்ட பயிற்சி மையத்தில் நடந்தது.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா), என்ற பெயரில் வனம், வேளாண்மை, மீன், கால்நடை, தோட்டக்கலை, பட்டு வளர்ச்சி, வேளாண்மை பொறியியல் துறை ஆகிய ஏழு துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட ஒரு திட்டம் வகுக்கப்பட்டது.

இது குறித்த கருத்தரங்கத்தில், வனவியல் விரிவாக்க அலுவலர் நீதிராஜன் "ஆத்மா' திட்டத்தில் வன துறை பங்கு மற்றும் பயன்பாடு குறித்து எடுத்துரைத்தார்.

பூண்டி ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குனர் தபேந்திரன், வேளாண்மை துறையில், அரசு வழங்கும் மானியம் குறித்து எடுத்துரைத்தார்.

இதேபோல், ஒவ்வொரு துறை அதிகாரிகளும், அரசு சார்பில் வழங்கப்படும் மானியம் குறித்து எடுத்துரைத்தனர்.

இதில், சதுரங்கப்பேட்டை, ஏகாட்டூர் ஆகிய பகுதிகளில் இருந்து இளைஞர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## சித்தூர் மாவட்டத்தில் தக்காளி கிலோ ரூ.10க்கு விற்பனை

நகரி:சித்தூர் மாவட்டத்தில், தக்காளி விலை அதிரடியாக குறைந்து கிலோ 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது.சித்தூர் மாவட்டத்தில் உள்ள மதனபள்ளி, பலமநேரு,

பூங்கனுரு மற்றும் பல பகுதிகளிலிருந்து, தமிழகத்திற்கு, தக்காளி வினியோகம் செய்து வருகின்றனர். இந்நிலையில், சில மாதங்களாக தக்காளியின் விலை கிலோ ஒன்றுக்கு 30 ரூபாய் வரை, சித்தூர் மாவட்டத்திலேயே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.ஆனால், தற்போது தக்காளி விளைச்சல் அதிகமாக உள்ளது. மேலும், திருமண நிகழ்ச்சிகள் போன்ற சுப நிகழ்ச்சிகள் வரும் காலங்களில், நடைபெறாது என்பதாலும், விலை குறைந்து உள்ளது. இதனால், நேற்று முன்தினம், மதனபள்ளி மார்க்கெட்டுக்கு, 435 டன் தக்காளி விற்பனைக்கு  வந்தது. இதை அங்குள்ள மொத்த  வியாபாரிகள் மூன்று விதமாக தரம் பிரித்து, விற்பனை செய்தனர். அதாவது, முதல் ரகம், கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரையிலும், இரண்டாம் ரகம் கிலோ ஒன்றுக்கு, 16 ரூபாய் முதல், 23 ரூபாய் வரையிலும், மூன்றாம் ரகம் கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய் முதல் 16 ரூபாய் வரையிலும் தரம் பிரித்து விற்பனை செய்தனர்.

## சொட்டுநீர் பாசனத்தில் பயிரிட்ட கரும்புகள்... விழிப்புணர்வு ஏற்படுத்த நவடிக்கை தேவை

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதியில் சொட்டு நீர் பாசனம் அமைத்து பயிரிட்ட விவசாயிகள், கோடையிலும் கரும்பு பயிர் காயாமல் காப்பாற்றி வறட்சியை சமாளித்தனர். இக்கருவியை வயல்களில் அமைக்க விவசாயிகளை ஊக்கப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த வேளாண்துறை முயற்சி எடுக்க வேண்டும்.

கடந்த ஆண்டு பருவமழை ஏமாற்றியதால் நீர்நிலைகள் நிரம்பாமல் தண்ணீர் தட்டுபாடு ஏற்பட்டது. நிலத்தடி நீர்மட்டம் பாதா ளத்திற்கு சென்றதால் விவசாயம் பாதித்தது.

தவிப்பு

கோடையில் வறட்சி அதிகமாகி ஆண்டு பயிராக சாகுபடி செய்த கரும்புக்கு தண்ணீர் கிடைக்காமல் பல நூறு ஏக்கர் பரப்பில் கருகின.

கிணற்றில் தண்ணீரின்றி கரும்பை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் தவித்தனர். கடந்த மே மாதத்தின் இறுதியில் பெய்த மழை காரணமாக கருகிய பயிர்களுக்கு ஓரளவு தண்ணீர் கிடைத்தாலும், தென் மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் போக்கு காட்டி வருகிறது. இதனால் தொடர்ந்து கரும்புக்கு போதிய தண்ணீர்பாய்ச்சுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பணத்தை செலவிட்டு கிணறுகளை ஆழப்படுத்தியும் நீர் சுரக்காததால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.

சொட்டு நீர் பாசனம்

சொட்டுநீர் பாசனத்தை செயல்படுத்திய விவசாயிகள் கடும் வறட்சியிலும் சிரமமின்றி பயிர்களை காப்பாற்றி கோடையை சமாளித்துள்ளனர். தியாகதுருகம் பகுதியில் 700 ஏக்கர் பரப்பில் சொட்டு நீர் பாசனம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இங்கு சாகுபடி செய்த கரும்பு பயிர்கள் கடும் கோடையிலும் கருகாமல் பசுமையாக காட்சியளிக்கிறது. தொடர்ந்து ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டிலும் சொட்டு நீர் பாசனம் மூலம் சீராக அள வான தண்ணீர் கிடைப்பதால் கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

மானியம்

இதை பார்த்தாலாவது மற்ற விவசாயிகளும் சொட்டு நீர் பாசனத்தை அமைக்க முயற்சிக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 43 ஆயிரத்து 816 ரூபாய் செலவாகிறது. இதற்காக அரசு பல சலுகைகளை வழங்கி வருகிறது.

இதனை அமைக்க

சிறு, குரு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் அரசு வழங்குகிறது.

பெருவிவசாயிகளுக்கு 75 சதவீதம் மானிய சலுகை வழங்குகிறது.

அந்தந்த பகுதி வேளாண்மை அலுவலம், மற்றும் தோட்டக்கலைத் துறை மூலம் சொட்டுநீர் பாசனம் அமைக்க போதிய ஆலோசனைகளும், ஏற்பாடுகளும் செய்து

கொடுக்கப்படுகிறது.

கிடைக்கும் தண்ணீரை வீணாக்காமல் பயன்

படுத்தி மகசூலை பெருக்கும் சொட்டுநீர் பாசனமுறை குறித்து போதிய

விழிப்புணர்வின்றி

பல விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் நிலை உள்ளது.

ஊக்கம் தேவை

வேளாண் துறை

அதிகாரிகள் கிராமங்களுக்கு சென்று விவசாயிகளை சந்தித்து சொட்டுநீர் பாசன கருவியை அமைக்க ஊக்கப்படுத்தினால் பலர் பயன் பெற வாய்ப்பு ஏற்படும். தற்போது கரும் பயிரிட்டுள்ள பரப்பை கணக்கில் எடுத்துகொண்டால் 3 சதவீத நிலத்தில் மட்டுமே சொட்டுநீர் பாசன கருவி அமைக்கப்பட்டுள்ளது. முறையான வழிகாட்டுதல் இருந்தால் பலர் பயனடையலாம்.

கரும்பு விவசாயிகள் மட்டுமின்றி பிற பயிர் சாகுபடி செய்பவர்களும் சொட்டுநீர் பாசனத்தை தங்கள் விளை நிலங்களில் அமைக்க வேளாண்துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதன் மூலம் வரும் காலங்களில் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையை சமயோஜிதமாக சமாளித்து கூடுதல் மகசூல் பெற்று லாபம் ஈட்டமுடியும்.

## ஆடிப் பட்டம் விதைப்பு விவசாயிகள் ஆர்வம்

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் பரவலாக பெய்துள்ள பருவமழையைப் பயன்படுத்தி விவசாயிகள் ஆடிப் பட்ட விதைப்புக்கு தயாராகி வருகின்றனர். கடந்த ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை துவங்கிய நிலையில் பரவாலாக மழை பெய்தது. இப்பருவ மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் பலரும் மானாவாரி மணிலா, பயறு வகைகள் விதைக்க, நிலங்களை உழவு செய்து, தொழு உரமிட்டு தயாராக வைத்துள்ளனர். கடந்த 20 நாட்களுக்கு மேல் மாவட்டத்தில்

மழை பெய்யாமல் வறட்சியாக இருந்தது. இந்நிலையில் இரு தினங்களாக திண்டிவனம், வானூர், விழுப்புரம் பகுதிகளில் மழை பெய்கிறது. ஆடி மாதம் பிறப்பை முன்னிட்டு, பருவ மழையைப் பயன்படுத்தி ஆடிப்பட்ட விதைப்பு செய்ய விவசாயிகள் ஆர்வம் செலுத்தியுள்ளனர்.

### மேட்டூர் நீர்மட்டம்72 அடியாக உயர்வு

மேட்டூர்: வினாடிக்கு, 18,557 கனஅடி நீர் வந்ததால் நேற்று முன்தினம், 70.5 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 72 அடியாக உயர்ந்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால், கர்நாடகாவின் காவிரி குறுக்கே கட்டியுள்ள கபினி, ஹேரங்கி அணைகள் நிரம்பி விட்டது. ஹேமாவதி, கே.ஆர்.எஸ்., அணை நீர்மட்டம் அதிகரித்து வருகிறது.இந்நிலையில், கபினி உபரி நீர் கடந்த, 25ம் தேதி முதல் தொடர்ச்சியாக மேட்டூருக்கு வந்து கொண்டிருக்கிறது. நேற்று வினாடிக்கு, 18,557 கனஅடி நீர் தொடர்ச்சியாக வந்ததால், நேற்று முன்தினம், 70.5 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 72.060 அடியாகவும், 33 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, 34.5 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது.

### பாசன வாய்க்காலில் தண்ணீர் திறக்க கோரிக்கை : கரும்பு பயிரிடுவோர் சங்கம் தீர்மானம்

மோகனூர்: "வாய்க்காலில் தண்ணீர் வரத்து இல்லாததால், வாய்க்கால் பாசனத்தை நம்பி பயிரிட்டுள்ள கரும்பு, வாழை, நெல், வெற்றிலைக் கொடிக்கால் பயிர்கள் காய்ந்து, விவசாயிகளுக்கு பெருத்த இழப்பை ஏற்படுத்தும் சூழ்நிலை உள்ளது.மோகனூர் சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்க பொதுக்குழு கூட்டம், அதன் சங்க அலுவலகத்தில் நடந்தது.சங்க துணைத் தலைவர் துரைசாமி தலைமை வகித்தார். செயலாளர் நவலடி வரவேற்றார். பொருளாளர் அஜிதன், நிர்வாகிகள் ராஜாகண்ணன், கணேசன், வரதராஜன் ஆகியோர் முன்னிலை

வகித்தனர்.கூட்டத்தில், சங்கத் தலைவராக செயல்பட்டு வந்த கருப்பண்ணன், சமீபத்தில் நடந்த கூட்டுறவு சங்கத் தேர்தலில், மோகனூர் சர்க்கரை ஆலையின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அவர் சங்கத் தலைவர் பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக, கேட்டுக் கொண்டதற்குகேற்ப, புதிய தலைவராக, ஒருங்கிணைப்பாளர் ராமலிங்கத்தை தேர்வு செய்வது, என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மோகனூர் சர்க்கரை ஆலை நிர்வாகக்குழு பொறுப்பேற்று, இரண்டு மாதம் முடிவடையும் நிலையில், இதுவரை, விவசாய சங்க பிரதிநிதிகளையோ, விவசாயிகளையோ சந்திக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. அதனால், விரைவில் விவசாய பிரதிநிதிகளை சந்திக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.தற்போது, காவிரியில், 3,000 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. வாய்க்காலில் தண்ணீர் வரத்து இல்லாததால், வாய்க்கால் பாசனத்தை நம்பி பயிரிட்டுள்ள கரும்பு, வாழை, நெல், வெற்றிலைக் கொடிக்கால் பயிர்கள் காய்ந்து, விவசாயிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தும் சூழ்நிலை உள்ளது.விவசாயிகள் நிலையை கருத்தில் கொண்டு, ராஜா, குமாரபாளையம், மோகனூர் வாய்க்காலில் தண்ணீர் திறக்க, தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மோகனூர் சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்துள்ள கரும்பு பயிர்களில், போதிய தண்ணீர் இன்றி, 70 சதவீதத்துக்கு மேல், காய்ந்து கருகி உள்ளது.அதனால், விவசாயிகள் போட்ட முதலை எடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட ஆலை அங்கத்தினர்களுக்கு, நஷ்ட ஈடு வழங்க, சம்பந்தப்பட்ட விவசாயிகளை அழைத்து பேசி, ஆலை நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. சங்க நிர்வாகிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## வேளாண் மையத்தில் விதை நெல் இருப்பு

நாமக்கல்: "எருமப்பட்டி வேளாண் விரிவாக்க மையத்தில், சான்று பெற்ற விதை நெல் இருப்பு உள்ளது' என, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:எருமப்பட்டி சுற்றுவட்டாரத்தில், 2,000 ஹெக்டேர் பரப்பளவில், நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்க, எருமப்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் சான்று பெற்ற நெல் விதை, 5,250 கிலோவும், வெள்ளைப் பொன்னி சான்று பெற்ற நெல் விதை, 6,250 கிலோவும் இருப்பில் உள்ளது.எனவே, நெல் பயிரிட விரும்பும் விவசாயிகள், விதை கிராம திட்டத்தின் கீழ், 50 சதவீத மானியத்தில் தரமான விதையை பெற்று, பயன்பெற வேண்டும். மேலும், திருந்திய நெல் சாகுபடி முறையில் உரிய தொழில்நுட்பங்களை கடைபிடித்து சாகுபடி செய்யும், 30 விவசாயிகளுக்கு, நெல் இயக்க திட்டத்தின் கீழ், 3,000 ரூபாய் மதிப்பில் மானியம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள், எருமப்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.07.2013**

**தீவனங்கள் தட்டுப்பாட்டால் வாத்து முட்டை உற்பத்தி சரிவு**

கம்பம்: கம்பம் பகுதியில் தீவனங்கள் தட்டுப்பாட்டால் வாத்து முட்டை உற்பத்தி குறைந்து வருகிறது. கம்பம், சுருளிப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, ஆங்கூர்பாளையம், சாமாண்டிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் அறுவடை சமயத்தில் உசிலம்பட்டி, கருமாத்துீர், செக்காணுீரணி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பெரும்பாலானோர் குடும்பத்துடன் வந்து தங்கி ஆயிரக்கணக்கான வாத்துகளை கொண்டு வந்து மேய்ச்சலுக்காக இப்பகுதியில் விடப்பட்டு அதன் முட்டைகளை கேரளாவிற்கு விற்பனை செய்கின்றனர். கடந்த சில மாதங்களாக போதிய மழை இல்லாததால் பல பகுதிகளில் நெல் நடவுப்பணி பாதிக்கப்பட்டது. வாத்துகளை மேய்ச்சலுக்கு விட முடியாலும், போதிய தீவனங்கள் கிடைக்காததால் வாத்து வளர்ப்போர் கடும் சிரமம் அடைந்தனர். தீவன தட்டுப்பாட்டால் முட்டை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டதுடன் விலையும் குறைந்துள்ளது. இதுகுறித்து வாத்து உரிமையாளர் பாண்டி கூறுகையில் “ஆண்டுதோறும் வழக்கமாக 800 வாத்துகள் வரை மேய்ச்சலுக்காக கம்பம் பகுதிக்கு கொண்டு வருவோம். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இரண்டு நாட்களுக்கு ஒரு முறை 500 முட்டைகள் வரை தலா ரூ.5க்கு கேரளாவிற்கு விற்பனை செய்து வந்தோம். தற்போது வாத்துகளுக்கு தேவையான தீவனங்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. இதனால் 100 முட்டைகள் விற்பனை செய்வதே கஷ்டமாக உள்ளது. விலையும் குறைவாக

உள்ளது. போதுமான அளவு மழை பெய்தால் மட்டுமே தீவனங்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பதுடன் முட்டை உற்பத்தியும் அதிகரிக்கும்“ என்றார்.

**வாழைத்தார் விலை திடீர் உயர்வு கம்பம் விவசாயிகள் உற்சாகம்**

கம்பம்: ரம்ஜான் பண்டிகை நோன்பு துவங்கியுள்ளதால் கம்பம் பகுதியில் வாழைத்தார் விலை உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கம்பம், கூடலுஈர், காமயகவுண்டன்பட்டி, அணைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வாழை, திராட்சை மற்றும் காய்கறி பயிர்கள் பயிரிடப்படுகிறது. இப்பகுதியில் சொட்டுநீர் பாசனம் மூலம் வாழை விவசாயம் நடக்கிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் வாழைத்தார்களை மொத்த வியாபாரிகள் வாங்கி கேரளா மற்றும் பெங்களூருக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரம் வரை ஒரு கிலோ வாழைக்காய் 10க்கும் குறைவாக விற்கப்பட்டது. ரம்ஜான் நோன்பு துவங்கியுள்ளதால் வாழைத்தார் தேவை அதிகரித்துள்ளது. இதனால், வாழைத்தார் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த சில தினங்களாக வாழைக்காய் கிலோ ரூ. 14 வரை விற்பனை செய்யப்படுகிறது. 20 முதல் 30 கிலோ கொண்ட ஒரு தாரின் விலை ரூ. 300 முதல் 420 வரை விற்பனையாகிறது. இதனால் விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர்.

**விவசாயிகள் மாநாடு பிரசாரம்**

காளையார்கோவில்: காளையார்கோவிலில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் அகில இந்திய மாநாட்டு விளக்க பிரசாரம் நடந்தது. விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய மாநாடு கடலூரில் வரும் 24ம் தேதி முதல் 27ம் தேதிவரை நடைபெற உள்ளது. இந்த மாநாட்டை விளக்கி காளையார்கோவில் ஒன்றியத்தில் மறவமங்கலம், கொல்லங்குடி, நாட்டரசன்கோட்டை, காளையார்கோவில் ஆகிய இடங்களில் பிரச்சாரம் நடந்தது. மாவட்டத் தலைவர்

மாணிக்கம் பிரசாரத்தை தொடங்கி வைத்தார். செயலாளர் ஆதிமூலம், பொருளாளர் அய்யனார் ஆகியோர் மாநாட்டின் நோக்கம் குவித்து பேசினர்.

DAILY THANTHI

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.07.2013**

## தொடர் மழை எதிரொலி நிலக்கடலை சாகுபடி செய்த கூடலூர் விவசாயிகள் மகிழ்ச்சி

கூடலூர்,

கூடலூர் பகுதி மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை பயிர்கள் தொடர் மழை எதிரொலி யாக நன்கு விளைச்சல் அடையும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நிலக்கடலை சாகுபடி

தேனி மாவட்டம், கூடலூர் மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தையொட்டி கழுதைமேடு புலம், பெருமாள் கோவில் மலைப்பகுதி, பளி யன்குடி, ஏகலூத்து பகுதியில் மானாவாரி நிலங்கள் ஏராள மாக உள்ளன. இந்த பகுதிகளில் விவசாயிகள் நிலக்கடலை சாகுபடி செய்துள்ளனர். சித்திரை மாதத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை செடிகள் அடுத்த மாதம் விளைச்சல்அடைந்து விடும்.

கடந்த சில வாரங்களாக நிலக்கடலை சாகுபடி செய்யப் பட்ட பகுதிகளில் பருவமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக நிலக்கடலை செடிகள் நன்கு விளைச்சல் அடைந்துள்ளன. கடந்த ஆண்டு இந்த பகுதியில் நிலக் கடலை சாகுபடி செலவு அதிகரித்த நிலையில், போதிய விலை கிடைக்காததால் விவ சாயிகள் பரிதவித்தனர்.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

இதன் காரணமாக இந்த ஆண்டு இப்பகுதியில் நிலக் கடலை சாகுபடி பரப்பு நான்கில் ஒரு பங்காக குறைந்து விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். இருப்பினும் குறைந்த பரப் பளவில் சாகுபடி செய்யப் பட்ட நிலக்கடலை செடிகள் தொடர் மழையால் நன்கு விளைச்சல் அடைந்துள் ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**சத்தியமங்கலம் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் ரூ.48 லட்சத்துக்கு பருத்தி–வாழைப்பழங்கள் விற்பனை**

சத்தியமங்கலம்,

சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில், ரூ.48 லட்சத்துக்கு பருத்தி–வாழைப்பழங்கள் விற்பனையானது.

<u>பருத்தி</u>

சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில், பருத்தி–வாழைப்பழங்கள் ஏல விற்பனை நடைபெற்றது. சத்தியமங்கலம், சிக்கரசம்பாளையம், கொத்தமங்கலம், கெஞ்சனூர், தாண்டாம்பாளையம், அரசூர், மாக்கிணாங்கோம்பை, கடத்தூர், அரியப்பம்பாளையம், டி.ஜி.புதூர், கே.என்.பாளையம், பண்ணாரி, ராஜன் நகர் உள்பட 40–க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் பருத்தி மூட்டைகளையும், வாழைப்பழங்களையும் விற்பனை செய்ய கொண்டு வந்திருந்தார்கள்.

பிரம்மா, ஆர்.டி.சி., சஞ்சு ரக பருத்திகள் குவிண்டால் 4 ஆயிரத்து 800 ரூபாய் முதல் 5 ஆயிரத்து 400 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.44 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது.

<u>வாழைப்பழங்கள்</u>

இதேபோல் 2 ஆயிரம் தார் வாழைப்பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் கதளி ரகம் ஒரு கிலோ 54 ரூபாய் 10 காசுக்கும், நேந்திரம் 48 ரூபாய் 60 காசுக்கும் ஏலம் போனது. வ்வாழை தார் ஒன்று 710 ரூபாய்க்கும், தேன்வாழை 660 ரூபாய்க்கும், ரஸ்தாளி 610 ரூபாய்க்கும், மொந்தன் 480 ரூபாய்க்கும், பூவன் 535 ரூபாய்க்கும், ரொபஸ்டா 475 ரூபாய்க்கும், பச்சைநாடன் 540 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.4 லட்சத்துக்கு வாழைப்பழங்கள் விற்பனையானது.